## பெற்றோர்களுடனான நல்லுறவு

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அ) அவருடைய பெற்றோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்களுக்கு வயோதிக வயதில் இந்த மகனை அளித்தான், ஆகவே, அவரை இவர்கள் பெரிதும் அன்பு காட்டினர், மகனும் மிகவும் பண்புள்ளவராக இருந்தார். அவர் தன் பெற்றோருக்கு முழுதும் கீழ்ப்படிந்து நடந்தார். ஒரு நாள் ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்கள் ஒரு வினோதமான கனவைக்கண்டார்கள், அதன்படி கட்டளையை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய அன்பு மகனிடம் அவருடைய கருத்தினைக் கேட்டார்கள். திருக்ஃகுர்ஆன் அதனைப்பற்றிக் கூறு கிறது:

قَالَ يَٰبُنَيَّ إِنِّيٓ أَرَىٰ فِي ٱلۡمَنَامِ أَنِّيٓ أَذۡبَحُكَ فَٱنظُرۡ مَاذَا تَرَىٰۚ (الصافات: 102)

*பொருள்: என் அருமை மகனே நான் உன்னைப் பலியிடுவதாகக் கனவு கண்டேன், உனது கருத்து என்ன என்பதைச் சொல்.* ஒரு வாலிப மகனுடைய தந்தையின் இந்தவிதமாக அபூர்வமாக அவனிடம் கேட்பது என்பது திகைப்புக்குரிய கேள்வியாகும், ஆனால், அதைவிட ஆச்சரியத்துக்குரிய மற்றும் நிறைவான இறைநம்பிக்கையுடைய பதில்தான் அந்த மகனிடமிருந்து வந்தது, திருமறை கூறுகிறது:

قَالَ يَٰٓأَبَتِ ٱفۡعَلۡ مَا تُؤۡمَرُۖ سَتَجِدُنِيٓ إِن شَآءَ ٱللَّهُ مِنَ ٱلصَّٰبِرِينَ ١٠٢

*பொருள்: அதற்கு அவர் கூறினார், என் தந்தையே உங்களுக்கு என்ன கட்டளையிடப்படுகிறதோ அதைச்செய்துவிடுங்கள், அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளர்களில் ஒருவனாகக் காண்பீர்கள்.*

இது பெரும் பாக்கியம் மற்றும் பெற்றோருக்குக் கீழ்ப்படிதலுக்கான உச்சக்கட்ட நிலையாகும், இதனை அடைவதற்கு ஒருவன் தன் உயிரையும் தியாகம் செய்யவேண்டியிருக்கின்றது. நிச்சயமாக ஹஜ்ரத் இஸ்மாயீல் (அ) அவர்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் உலகத்திலுள்ள அனைவருக்கும் ஒரு உயர்ந்த முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள்.

நபிமொழிகளில் பிரபலமான ஒரு சம்பவம் கூறப்பட்டுள்ளது, மூன்று பேர் ஒரு குகையில் சிக்கிக்கொண்டனர். அந்த மூவரும் தாங்கள் செய்த ஒரு நன்மையான செயலை எடுத்துக்கூறி அதன் பொருட்டாக அல்லாஹ்விடத்தில் துஆ கேட்டு அவர்களுடைய கஷ்டநிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் அல்லாஹ்விடம் தன்னுடைய பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்ததன் பொருட்டாகத் துஆ கேட்டார். அவருக்கு வயதான பெற்றோர்கள் இருந்தனர், அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இரவில் வீடு திரும்பியபின் பால் கறந்து முதலில் தன் பெற்றோருக்குக் கொடுப்பார், மீதி இருக்குமானால் பின்பு தன் மனைவி மக்களுக்குக்

www.uzairfalahi.com

கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தாமதமாகிவிட்ட நிலையில் பால் கொண்டு வந்தபோது அவனுடைய பெற்றோர் தூங்கிவிட்டிருந்தனர். தன் கையில் அந்தப் பால் கோப்பையை ஏந்தியவாறு அவர்களுக்கு அருகி லேயே நின்று அவர்கள் விழித்தபின் கொடுக்கலாம் என்றும் அவர்கள் தூக்கம் கலையக்கூடாது என்பதற்காகவும் அவர்களை எழுப்ப விரும்ப வில்லை. தன்னுடைய குழந்தைகள் பசியால் கதறியபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் பெற்றோர் விழித்துக்கொள்ளவேண்டும் என்று காத்திருந்தான். இறுதியில், தான் செய்த நற்காரியத்தின் பொருட்டால் இவன் கேட்ட துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டது, இந்த மூவரும் குகையிலி ருந்து வெளியே வந்துவிட்டனர். **(متفق عليه)**

## பெற்றோரின் மகிமை மற்றும் அந்தஸ்து

பெற்றோரின் சொல் தட்டாமல் அவர்களுக்குக் கீழ்ப்படிவது மற்றும் அவர் களுடன் நல்லுறவு கொண்டிருப்பது பற்றி இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத் தப்பட்டுள்ளது. உலகத்தில் இவர்களுக்குச் சமமான அந்தஸ்து யாருக்குமே கிடையாது. அல்லாஹ் தஆலா தன்னுடைய வணக்கத்திற்கு (இபாதத்) அடுத்ததாக பெற்றோர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பது பற்றி கூறுகி றான்: **(الإسراء: 23)** وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعْبُدُوٓاْ إِلَّآ إِيَّاهُ وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَٰنًا பொருள்: *உம திறைவன் விதித்துள்ளான், அவனைத்தவிர வேறெதனையும் நீங்கள் வணங் காதீர்கள், தாய் தந்தையரிடம் மிகக்கண்ணியமான முறையில் நடந்துகொள் ளுங்கள்.* மற்றொரு இடத்தில் கூறுகிறான் **(النساء:36)** وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَٰنًا பொருள்: *தாய் தந்தையரிடம் நல்ல விதமாக அன்புடன் நடந்துகொள்ளுங் கள்.* மற்றுமொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَوَصَّيْنَا ٱلْإِنسَٰنَ بِوَٰلِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُۥ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَٰلُهُۥ فِى عَامَيْنِ أَنِ ٱشْكُرْ لِى وَلِوَٰلِدَيْكَ إِلَىَّ ٱلْمَصِيرُ ﴿١٤﴾ **(لقمان: 14)**

பொருள்: *மேலும் பெற்றோர் நலம் பேண வேண்டும் என்று நாம் மனித னுக்கு அறிவுறுத்தியுள்ளோம். அவனுடைய தாய் நலிவுக்குமேல் நலிவை ஏற்று அவனைத் தன் வயிற்றில் சுமந்தாள். மேலும் அவன் பால்குடி மறக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன. இதனால்தான் நாம் அவனுக்கு அறிவுரை கூறினோம். எனக்கு நன்றி செலுத்து மற்றும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்து. என் பக்கமே நீ திரும்பிவரவேண்டியுள்ளது.*

## அவர்களுடைய மறைவுக்குப் பின்பும்

பெற்றோரின் வாழ்நாளில் அவர்களுடன் நல்லவிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது கடமையாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது அவர்களு

www.uzairfalahi.com

டைய மறைவுக்குப்பின்பும் அதுவலியுறுத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களுடன் நல்லவிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது அவர்களுக்காக தூய மனதுடன் துஆ செய்வதாகும். அவர்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, அவர்களுடைய ஆசை மற்றும் உயில்கள் நிறைவேற்றப்படவேண்டும், அவர்களுடைய உறவினர்களுடன் உறவுகளைப் பேணவேண்டும், அவர்களுடைய நண்பர்கள், அவர்களுடன் பழகுபவர்கள் அனைவருடனும் மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டும். பனூ சல்மா வம்சத்தைச்சேர்ந்த ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து பெற்றோர்களின் மறைவுக்குப்பின்பும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ள முடியுமா என்று கேட்டார். கூறினார்கள், ஆம், அது எவ்வாறென்றால் நீங்கள் அவர்களுக்காக துஆ செய்யுங்கள், அவர்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக்கோருங்கள், அவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அவர்களுடைய நண்பர்களைக் கண்ணியப்படுத்துங்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களுடனான உறவுகளைப் பேணுங்கள் (இப்னு மாஜா). பெற்றோர்களுக்காக துஆ செய்யுமாறு அல்லாஹ் தஆலா அறிவுறுத்தி ஈமான் கொண்டோர்களுக்கு வலியுறுத்திக்கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

رَبَّنَا ٱغْفِرْ لِى وَلِوَٰلِدَىَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ ٱلْحِسَابُ ﴿٤١﴾ **(إبراهيم : 41)**

*பொருள்: எங்கள் இறைவனே, எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் கேள்வி கணக்கு கேட்கப்படும் நாளில் மன்னிப்பை அருள்வாயாக.*

رَّبِّ ٱغْفِرْ لِى وَلِوَٰلِدَىَّ وَلِمَن دَخَلَ بَيْتِىَ مُؤْمِنًا وَلِلْمُؤْمِنِينَ وَٱلْمُؤْمِنَٰتِ **(نوح : 28)**

*பொருள்: என் இறைவனே, எனக்கும் என் தாய் தந்தையருக்கும் என் வீட்டில் இறைநம்பிக்கை கொண்டவனாகப் பிரவேசித்திருக்கும் ஒவ்வொருவனுக்கும் (நீ மன்னித்ருள்வாயாக).*

www.uzairtalahi.com

## பெற்றோர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பதன் சிறப்பு

இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது, அல்லாஹ்விடத்தில் அவனுக்கு மிகப்பிரியமான செயல் (அமல்) எது? இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அதற்கான நேரத்தில் பேணுதலுடன் தொழுதுவரும் தொழுகை. அதற்கு அடுத்ததாக எந்த அமல் சிறந்தது என்று கேட்கப்பட்ட போது கூறினார்கள், பெற்றோர்களுடன் நல்லவிதமாக நடந்துகொள்வது. பின்பு,அதற்கு அடுத்ததாக எந்த அமல் சிறந்தது என்று கேட்கப்பட்டபோது கூறினார்கள், அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத். **(متفق عليه)** அல்லாஹ்வின் திருப்பொருத்தம் மற்றும் மகிழ்ச்சி பெற்றோருடைய பொருத்தம் மற்றும் மகிழ்ச்சியைச் சார்ந்திருக்கின்றது. யார் அல்லாஹ் தம்மைக் கொண்டு

பொருந்திக்கொள்ளவேண்டும் மகிழ்ச்சிகொள்ளவேண்டும் என்று நினைப்பார்களோ அவர்கள் தங்கள் பெற்றோர் தம்மைக்கொண்டு பொருந்திக் கொள்பவர்களாகவும் மகிழ்ச்சிகொள்பவர்களாகவும் வைத்திருக்கவேண் டும். அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகாமலிருக்கவேண் டும், அதனால் அல்லாஹ் கோபமடைந்துவிடக்கூடாது **(متفق عليه)**. இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகிறார்கள், **رِضَا الرَّبِّ فِيْ رِضَا الْوَالِدَيْنِ، وَسَخَطُ الرَّبِّ فِيْ سَخَطِ الْوَالِدَيْنِ**, பொருள்: *அல்லாஹ்வின் திருப்பொருத்தம் பெற்றோர்கள் பொருந்திக் கொள்வதில் உள்ளது, அல்லாஹ்வின் கோபம் பெற்றோர்களின் கோபத் தில் உள்ளது.*(திர்மிதி). ஸஹீஹ் புக்ஹாரியின் ஒரு ரிவாயத்தில் கூறப்பட் டுள்ளது யார் தன் பெற்றோரின் பொருத்தத்தைப் பெற்றுக்கொண்டார் களோ அவர்களைக்கொண்டு அல்லாஹ் பொருந்திக்கொண்டான், யார் தன் பெற்றோரின் வெறுப்பைத் தேடிக்கொண்டார்களோ அவர்கள் அல் லாஹ்வின் கோபத்தைத் தேடிக்கொண்டவர்கள் (புக்ஹாரி). ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து ஜிஹாதில் கலந்துகொள்ள அனுமதி கோரினார். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீங்கள் சென்று உங்க ளுடைய தாய்க்குப் பணிவிடை செய்யுங்கள். அந்த மனிதருக்கு ஜிஹாதில் செல்லவேண்டும் என்ற ஆசை அதிகமாக இருந்ததால் அவன் மீண்டும் வந்து ஜிஹாதில் கலந்துகொள் அனுமதி கோரினார். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரைத் திரும்ப அனுப்பியதோடு தன்னுடைய தாய்க்குப் பணிவிடைசெய்யுமாறு அறிவுறுத்தினார்கள். அவர் மீண்டும் மூன்றாவது முறையாக வந்தபோது அவர்கள் ﷺ மிகக் கண்டிப்புடன், நாசமாகப்போ, நீ சென்று உன்னுடைய தாயின் பாதங்களைப் பற்றிக்கொண்டவனாகப் பணிவிடைசெய்துகொண்டிரு, அங்கேதான் சுவர்க்கம் இருக்கின்றது (இப்னு மாஜா). இதுபோன்றே மற்றொருவர் வந்து கூறினார் எனக்கு ஜிஹாதில் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை மிக அதிகமாகவே உள்ளது ஆனால், என்னிடம் அதற்கான ஆற்றல் இல்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவனிடம் கேட்டார்கள், உன்னுடைய பெற்றோர்களில் எவரும் உயிருடன் உள்ளார்களா என்று, கூறினான் ஆம், என்னுடைய தாய் உயிருடன் இருக்கிறாள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் நீ சென்று அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிரு, அவருடன் நல்ல முறையில் நடந்துகொள், நீ இவ்வாறு செய்வாயேயானால், நீ ஹஜ்ஜையும் நிறைவேற்றிவிட்டாய், உம்ராவும் செய்துவிட்டாய் மற்றும் ஜிஹாதும் செய்துவிட்டாய், (தப்ரானி).

இவ்வாறே ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து கேட்டார், இறைத்தூதரே ﷺ நான் ஹிஜ்ரத் மற்றும் ஜிஹாத் செய்வதற்காக உம்மு டன் பைஅத்து செய்கிறேன் மற்றும் அல்லாஹ்விடம் அதற்கான கூலியை

www.uzarfalahi.com

நாடுகிறேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவனிடம் கேட்டார்கள், உன்னுடைய பெற்றோர்களில் எவரும் உயிருடன் உள்ளார்களா என்று, கூறினான் ஆம், என்னுடைய தாய் தந்தை இருவரும் உயிருடன் இருக்கிறார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கேட்டார்கள், நீ அல்லாஹ்விடம் பிரதிபலன் நாடுகிறாயா? அவன் கூறினான் ஆம், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் நீ சென்று அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிரு, அவர்களுடன் நல்ல விதமாக நடந்துகொள் (முஸ்லிம்).

## நன்மை செய்தால் நன்மை பெறுவாய்

நீங்கள் மற்றவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தால் மற்றவர்களும் உங்களுடன் நல்லுறவு கொண்டிருப்பார்கள் என்பது இயல்பான பொதுவான ஒனறுதான். ஆனால், பெற்றோருடன் நல்ல விதமான நடந்துகொள்வது என்பது தனித்தன்மை கொண்டது. ஒருவர் தன் தாய் தந்தையருடன் நல்லுறவு கொண்டிருப்பாரேயானால் அல்லாஹ் தஆலா அவருடைய குழந்தைகளும் அவருடன் நல்லுறவு கொண்டிருக்கும்படி அருள் புரிவான். உங்களுடைய குழந்தைகள் பண்புடையவர்களாகவும் கீழ்ப்படிபவர்களாகவும் இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நீங்களும் உங்கள் பெற்றோர்களுடன் நல்லவிதமாக நடந்துகொள்ளவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: بَرُّوْا آبَآءَكُمْ تَبَرَّكُمْ أَبْنَآؤُكُمْ، عِفُّوْا تَعِفُّ نِسَآؤُكُمْ பொருள்: *உங்கள் பெற்றோருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுங்கள் உங்கள் பிள்ளைகள் உங்களுக்குக் கீழ்ப்படிவார்கள், நீங்கள் கற்பொழுக்கத்தைக் கடைபிடியுங்கள் உங்கள் மனைவிகளும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.*(தப்ரானி, ஹாகிம்).

ஹஜ்ரத் சஅதுப்னு அபீவஃக்காஸ் (ர) ஒரு பிரபலமான நபித்தோழர், அவர்களுக்கு உலகிலேயே சுவர்க்கத்தின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. அவர்கள் ஈமான் கொண்ட சமயத்தில் அவருடைய தாய் மிகவும் கோபப்பட்டார்கள், கூறினார்கள் நீ இந்தப் புதிய மார்க்கத்தை விட்டு விலகாத வரை நான் சாப்பிடவே மாட்டேன் இதனால் நான் மரணித்துவிட்டாலும் சரியே, தன் தாயைக் கொன்றவன் என்று மக்கள் உன்னைப் பழிப்பார்கள். ஹஜ்ராத் சஅத் (ர) அவர்கள் மிகவும் கவலைப்பட்டார்கள், தன்னுடைய தாயைப் பணிவுடன் கேட்டுக்கொண்டார்கள் இவ்வாறு செய்யாதீர்கள், நான் இந்த மார்க்கத்தை விட்டுவிட முடியாது. மறுபுறம் ஹஜ்ரத் சஅதுடைய (ர) தாய் தன்னுடைய பிடிவாதம் மற்றும் அச்சுறுத்தலைத் தொடர்ந்தார்கள், ஒரு நாள் இரவு பகல் எதையும் சாப்பிடவுமில்லை குடிக்கவுமில்லை, பசியின் காரணமாக அவருடைய நிலைமை மோசமானபோது ஹஜ்ராத் சஅத் (ர) அவர்கள் கூறினார்கள், என் அருமைத்தாயே, நீங்கள் அறிவீர்கள், உங்களுக்கு நூறு உயிர்கள் இருந்து அந்த நூறு உயிர்களையும்

www.uzairfalahi.com

நான் என்னுடைய மார்க்கத்தைக் கைவிடவில்லை என்பதற்காக நீங்கள் துறந்து உங்களை மாய்த்துக்கொண்டாலும் நான் இந்த மார்க்கத்தை விடப்போவதில்லை. இனி உங்கள் விருப்பம், நீங்கள் சாப்பிடுங்கள் அல்லது சாப்பிடாமல் இருங்கள். ஹஜ்ராத் சஅத் (ர) அவர்களின் தாயார் அவருடைய ஈமானின் உறுதியைக்கண்டபோது வேறு வழியின்றி சாப் பிடத்துவங்கினார்கள். இப்பின்னணியில்தான் இந்த இறை வசனம் அருளப்பட்டது:

وَإِن جَٰهَدَاكَ عَلَىٰٓ أَن تُشْرِكَ بِى مَا لَيْسَ لَكَ بِهِۦ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا ۖ وَصَاحِبْهُمَا فِى ٱلدُّنْيَا مَعْرُوفًا ۖ (لقمان:15)

*பொருள்: எதனை நீ அறியமாட்டாயோ அதனை என்னோடு நீ இணை கற்பிக்கவேண்டுமென்று அவர்கள் இருவரும் உன்னை நிர்ப்பந்தித்தால் அவர்களுடைய பேச்சை நீ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதே. இவ்வுலகில் அவர்களுடன் நல்லமுறையில் நீ நடந்துகொள்.*

## இணைவைக்கும் பெற்றோர்களுடனும் நல்லுறவு கொண்டிருக்கும்படி இஸ்லாம் வலியுறுத்துகிறது

ஹஜ்ரத் அஸ்மா பின்த் அபூபக்ர் (ர) அவர்களைப்பற்றிய ஒரு சம்பவம் உண்டு, அவருடைய தாயார் அவரிடம் வந்தார்கள், ஆனால், அவர் ஈமான் கொண்டிருக்கவில்லை. ஹஜ்ரத் அஸ்மா பின்த் அபூபக்ர் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் தன் தாயாருடன் எவ்வாறு நடந்துகொள் வது என்று கேட்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள் **(متفق عليه)**.

## பெற்றோர்களுக்கு மாறு செய்தல்

அல்லாஹ் தஆலா பெற்றோருக்கு சிறிதளவும் மாறு செய்வதிலிருந்து தடுத் துள்ளான் மற்றும் அவர்களுக்கான கடமைகள் நிறைவேற்றப்படுவதில் சிறிதளவும் குறை ஏற்படக்கூடாதென்றும் அவர்களுக்குத் தீங்கு மற்றும் மனவருத்தத்திற்குக் காரணமாகும் அளவிற்கு எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளான். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

فَلَا تَقُل لَّهُمَآ أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُل لَّهُمَا قَوْلًا كَرِيمًا ﴿٢٣﴾ (الإسراء: 23)

*பொருள்: அவர்களைச் சீ என்றுகூட கூறாதீர்கள், மேலும் அவர்களைக் கடிந்து பேசாதீர். மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக.*

ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறுகிறார்கள், எவரும் தன்னுடைய பெற்றோர் களுக்கு எவ்வகையிலும் மனவருத்தம் உண்டாகும் வகையில் நடந்துகொண் டால் அவன் அவர்களுக்கு மாறு செய்தவனாகிவிட்டான்.

www.uzairfalahi.com

எவரும் தம் பெற்றோருக்கு மாறு செய்வதை இறைத்தூதர் ﷺ அவர்கள் பெரும் பாவமாகக்கருதினார்கள் மற்றும் அதனை அல்லாஹ்வுடன் இணை வைக்கும் செயலுடன் இணைத்துப் பேசியுள்ளார்கள். இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أَلاَ أُنَبِّئُكُمْ بِأَكْبَرِ الْكَبَائِرِ؟ ثَلاَثاً، قَالُوْا بَلَى يَا رَسُوْلَ اللهِ ، قَالَ:الإِشْرَاكُ بِاللهِ، وَعُقُوْقُ الْوَالِدَيْنِ

பொருள்: *பெரும் பாவங்களிலெல்லாம் மிகப்பெரியது எது என்று நான் உங்களுக்குக் கூறட்டுமா? (என்று மூன்று முறை கூறினார்கள்), ஆம், கூறுங்கள் இறைத்தூதரே ﷺ, கூறினார்கள் அல்லாஹ்வுடன் இணை வைப் பது மற்றும் பெற்றோருக்கு மாறு செய்வது* **(متفق عليه).** இந்த உலகம் உங்களுக்கான செயற்களம், செயல்கள் அனைத்திற்கான பிரதிபலன் மற்றும் கூலி மறுமையில் கிடைக்கும். ஆனால் பெற்றோருக்கு மாறு செய்வது என்பது எப்படிப்பட்ட பெரும்பாவம் என்றால் அல்லாஹ் தஆலா அதற் கான தண்டனையை இந்த உலகிலேயே கொடுத்துவிடுகிறான், மறுமை யில் கிடைக்கவேண்டியது அங்கு சென்றபின் கிடைத்தே தீரும். இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: *அனைத்து பாவங்களுக்கான கூலியை அல்லாஹ் மறுமை வரையில் தள்ளிவைக்கிறான் பெற்றோருக்கு மாறு செய்த குற்றத்தின் தண்டனையைத்தவிர. அல்லாஹ் தஆலா இக்குற்றத் தைப் புரிந்தவனுக்கு அவன் மரணிப்பதற்கு முன்பாகவே அவனுடைய வாழ்நாளிலேயே அதற்கான தண்டனையைக் கொடுத்து விடுகிறான். (புக்ஹாரி).*

* * *

www.uzairfalahi.com